

# கோவை அரவிந்த் கண் மருத்துவமனையில் அதிநவீன டிஜிட்டல் சிகிச்சை மையம் திறப்பு

கோவை, ஏப். 9–

கோவை அரவிந்த் கண் மருத்துவமனையில் பைனோக்ஸ் நிறுவனத்தின் உதவியுடன், அதிநவீன அம்பிலியோபியா மற்றும் இருவிழி பார்வை கிளினிக் தொடங்கப்பட்டுள்ளது.

பைனோக்ஸ் என்பது பார்வை சிகிச்சைக்கான ஏஐ அடிப்படையிலான டிஜிட்டல் சிகிச்சையில் உலகளவில் முன்னணி நிறுவனம் ஆகும். இந்த நிகழ்வு அரவிந்த் கண் மருத்துவமனையின் குழந்தை கண் துறைக்கான புதிய கட்டிடத்தின் முதலாவது மாடியில் நடைபெற்றது.

இது குறித்து அரவிந்த் கண் மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரி நரேந்திரன் கூறுகையில், இந்த சிகிச்சையகம், அம்பிலியோபியா (சோம்பேறிக் கண்), இடைப்பட்ட மாறு கண் மற்றும் டிஜிட்டல் கண் அழுத்தம், கணினி பார்வை நோய்க்குறியால் பாதிக்கப்படுபவர்களுக்கு, அனைத்து வயதினருக்கும் மேம்பட்ட நோயாளிக்கு ஏற்ற சிகிச்சை விருப்பங்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

அம்பிலியோபியா தோராயமாக உலக மக்கள் தொகையில் 2 முதல் 3 சதம் பாதிக்கிறது. வழக்கமாக இது குழந்தை பருவத்தில் தொடங்குகிறது. சிகிச்சையளிக்கப்படாவிட்டால், இது நிரந்தர பார்வை குறைபாட்டிற்கு வழிவகுக்கும்.

டிஜிட்டல் கண் அழுத்தம், கணினி பார்வை நோய்க்குறி என்றும் அழைக்கப்படுகிறது. இது உலகளவில் 60 சதத்துக்கும் அதிகமான கணினி பயனர்களை பாதிக்கும் வகையில் பெருகிய முறையில் பரவலாக உள்ளது. நீண்ட திரை வெளிப்பாடு காரணமாக, பொதுவான அறிகுறிகளில் கண் சோர்வு, மங்கலான பார்வை, தலைவலி, கவனம் செலுத்துவதில் சிரமம் மற்றும் காட்சி அசௌகரியம் ஆகியவை அடங்கும்.

பெரும்பாலும் கவனிக்கப்படாமல் இருந்தால் அன்றாட உற்பத்தித்திறன் மற்றும் வாழ்க்கைத் தரத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. சரியான சிகிச்சை அளித்தால் இரண்டு நிலைகளையும் திறம்பட நிர்வகிக்கலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

"இந்த கிளினிக் அனைத்து வயதினரின் நோயாளிகளிடையே இருவிழி பார்வை கோளாறுகளை நிவர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கும்." என்றார்.

மூத்த மருத்துவ அதிகாரி டாக்டர் கல்பனா நரேந்திரன், "முன்னதாக, சிகிச்சை விருப்பங்கள் முக்கியமாக குழந்தைகளுக்கு மட்டுமே இருந்தன. ஆனால் பைனோக்ஸ் போன்ற கண்டுபிடிப்புகளுடன், அம்பிலியோபியா உள்ள பெரியவர்கள் கூட டிஜிட்டல் சிகிச்சைகள் மூலம் மேம்பட்ட பார்வை அனுபவிக்க வாய்ப்பு உள்ளது." என்றார்.

குழந்தை கண் மருத்துவம் மற்றும் மாறு கண் துறையின் ஆலோசகர் சாண்ட்ரா கணேஷ், பைனோக்ஸ் தளத்தின் எளிமை மற்றும் தாக்கத்தைப் பற்றி பேசினார்.

பைனோக்ஸ் தலைமை நிர்வாக அதிகாரி ஒலியுல்லா அப்தால் இந்த ஒத்துழைப்பு குறித்த தனது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டு பேசும்போது, "சிறந்த கண் சிகிச்சைக்கு பெயர் பெற்ற அரவிந்த் கண் மருத்துவமனையுடன் இணைந்து இந்த சேவையை செய்வதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம் என்றார்.



கோவை மாநகராட்சி ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ஆடிஸ் வீதியில் ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மைய கட்டிடத்தினை மேயர் கா.ரங்கநாயகி நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

# கிருஷ்ணகிரி ஆவினில் கூடுதல் உப பொருட்கள் தயாரிக்க அரசுக்கு கருத்துரு

## அலுவலர்களுக்கு கலெக்டர் தினேஷ்குமார் உத்தரவு



கிருஷ்ணகிரி, ஏப். 9–

கிருஷ்ணகிரி ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றிய வளாகத்தை, கலெக்டர் தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கிருஷ்ணகிரி பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட பால் வரத்து, பால் பதப்படுத்தும் பணிகள், நெய், பால்கோவா, குல்பி, பாதாம் பவுடர், வெண்ணை, மோர், பால் பேக்கட் தயாரிக்கும் பணிகள் மற்றும் தரக்கட்டுப்பாட்டு பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கிருஷ்ணகிரி ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு நாள்தோறும் 90 ஆயிரம் லிட்டர் பால் வரத்து உள்ள நிலையில் உள்ளூர் விற்பனையாக 26,500 லிட்டரும், 5 ஆயிரம் லிட்டர் பால் உபபொருட்கள் உருமாற்றம் செய்யவும், 58,500 லிட்டர் பால் சென்னைக்கு நாள்தோறும் அனுப்பப்பட்டு வருகிறது.

மேலும், பண்ணை பிரிவின் செயல்பாடுகளான பால் பாக்கெட், வெண்ணெய், குல்பி, பால் கோவா, நறுமணப்பால், பாதாம் பவுடர், தயிர், மோர், பால் பவுடர் தயாரிப்பு குறித்து பொது மேலாளர் மற்றும் பண்ணைபிரிவு அலுவலர்கள் எடுத்துரைத்தனர்.

பால் பதப்படுத்தம் இடம், பால் பொருட்கள் உற்பத்தி செய்யப்படும் இடங்களை தூய்மையாக பராமரிக்க வேண்டும். பண்ணை வளாகத்தினை புனரைமைப்பு செய்து பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், கூடுதல் பால் உபபொருட்கள் உற்பத்தி செய்யவும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அரசுக்கு கருத்துரு தயார் செய்ய வேண்டும் என அலுவலர்களுக்கு கலெக்டர் தினேஷ் குமார் உத்தரவிட்டார்.

தொடர்ந்து, கலெக்டர், என்பிடிடி திட்டத்தின் கீழ், தலா ரூ.55,000 வீதம் 10 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.5 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் பகுப்பாய்வு கருவிகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, ஆவின் பொதுமேலாளர் சுந்தரவடிவேலன், துணைப் பதிவாளர் (பால்வளம்), உதவி பொது மேலாளர் (பால்பதம்), உதவி பொது மேலாளர் (பால் உற்பத்தி), பிரிவு மேலாளர்கள் (பால்பதம், விற்பனை, பொறியியல்), கால்நடை மருத்துவர், கணக்கு துணை மேலாளர்கள் (பொறியியல்), தரக்கட்டுப்பாடு மற்றும் ஒன்றிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.



# கோவை மாநகராட்சி மேற்கு மண்டல பகுதிகளில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்ட பணிகள்

## கமிஷனர் மா.சிவகுரு பிரபாகரன் ஆய்வு

கோவை, ஏப். 9–

கோவை மாநகராட்சி மேற்கு மண்டல பகுதிகளில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடை திட்டப்பணிகளை மாநகராட்சி கமிஷனர் மா.சிவகுரு பிரபாகரன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கோவை மாநகராட்சி மேற்கு மண்டலம், வார்டு எண் 38க்கு உட்பட்ட கல்வீரம்பாளையம் சாலை, பொம்மநாயக்கன்பாளையம், ஆர். ஆர்.அவென்யூ பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருவதையும், வார்டு எண் 37க்கு உட்பட்ட மருதமலை சாலை, வடவள்ளி, பத்மா நகர் மற்றும் வார்டு எண் 35க்கு உட்பட்ட ஆட்டோ நகர் ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் குழாய்கள் பதிக்கப்பட்டு, சாலை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதையும் கமிஷனர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைவாக மேற்கொள்ள அலுவலருக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, மேற்கு மண்டல தலைவர் கே.ஏ.தெய்வயானை தமிழ்மறை, உதவி ஆணையர் துரைமுருகன், உதவி செயற்பொறியாளர் சவிதா, மாமன்ற உறுப்பினர்கள் குமுதம் குப்புசாமி, சம்பத், மண்டல சுகாதார அலுவலர் வீரன், உதவி பொறியாளர் விமலா மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

# கரூரில் 12ந் தேதி பொது விநியோக திட்ட குறைதீர் முகாம்: கலெக்டர் தகவல்

கரூர், ஏப். 9–

கரூர் மாவட்டத்தில் பொது விநியோகத்திட்டத்தில் குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், பெயர் திருத்தம், புதிய குடும்ப அட்டை கோருதல், கைபேசி எண் பதிவு மற்றும் பொது விநியோக கடைகளின் செயல்பாடுகள் மற்றும் அத்தியாவசிய பொருட்களின் தரம் குறித்த புகார்கள், தனியார் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் மற்றும் சேவை குறைபாடுகள் குறித்த புகார்களை நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 2013இன் படி மேற்கொள்ள பொது விநியோகத் திட்டத்தின் சேவைகளை அனைத்து தரப்பு மக்களுக்கும் வழங்க குறை நிவர்த்தி செய்யும் பொருட்டு பொது விநியோகத்திட்ட மக்கள் குறைதீர் கூட்டம் 12ந் தேதி காலை 10 மணி முதல் 1 மணி வரை கரூர், அரவக்குறிச்சி, மண்மங்கலம், புகளூர், குளித்தலை, கிருஷ்ணராயபுரம் மற்றும் கடவூர் வட்ட வழங்கல் அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே, பொது மக்கள் மேற்படி குறை தீர்க்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு பொது விநியோகத் திட்டம் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்2013 தொடர்பான தங்களது குறைகளை தீர்வு செய்து கொள்வதற்கு இக்கூட்டத்தினை பயன்படுத்தி கொள்ளுமாறு கலெக்டர் தங்கவேல் தெரிவித்துள்ளார்.


**SMFG Grihashakti**

**எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்**

(முன்பு புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்)

கார்ப்பரேட் அலுவலகம் : 503 & 504, 5வது தளம், ஜி பிளாக், இன்சிப்ரே பிகேசி, பிகேசி மெயின் ரோடு, பாந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பாந்த்ரா (இ), மும்பை 400051.

பதிவு அலுவலகம் : காமர்ஸ்சோன் ஐடி பார்க், டவர் பி, முதல் தளம், எண்.111, மவுண்ட் பூந்தமல்லி சாலை, போரூர், சென்னை 600 116, தமிழ்நாடு

**அசையா சொத்து சுவாதீனம் எடுத்த அறிவிப்பு [(பிற்சேர்க்கை IV விதி 8 (1) ன் கீழ்)]**

கீழேகையொப்பமிட்டுள்ளவீட்டுகடன்வசதிவழங்கும்நிறுவனமான[தேசியவீட்டுவசதிவங்கியில்முறையாகப்பதிவுசெய்யப்பட்டுள்ளது(முழுமையாகRBIக்குசொந்தமானது)] **எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின்** (முன்பு புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்) (இனி SMHFC என அழைக்கப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும் (54 ஆப் 2002), மேற்சொன்ன சட்டத்தின் 13(12)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்பவும், மேற்படி சட்டத்தின் 13(2) பிரிவின் கீழ் கடன்தாரர்களாகிய நீங்கள் (கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள்) அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையையும் அதற்கான வட்டியையும் அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். கடன்தாரர்(கள்) மேற்குறிப்பிட்டுள்ள தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டப்பிரிவு 13, துணை பிரிவு (4)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள் 2002ன் 8வது விதிமுறைக்கு இணங்கவும் சுவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து "SMHFC"க்கு செலுத்த வேண்டிய கீழ்க்கண்ட தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | கடன்தாரர் / உத்தரவாததாரர் பெயர் மற்றும் கடன் கணக்கு எண் | பாதுகாக்கப்பட்ட சொத்துகளின் விவரம் (அசையா சொத்து) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை | சுவாதீனத் தேதி |
|---|---|---|---|---|
| 1. | கடன் கணக்கு எண் : 603439211426642 1. மோகன் லட்சுமணன் 2. ராஜேஸ்வரி மோகன் | சொத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சர்வே எண். 94/3, 97/2, மொத்த பரப்பளவு 2004 3/4 சதுர அடி, கதவு எண் (சொத்து வரியின்படி) 94/3, மனை எண். 39, பழங்காரை கிராமம், அவினாசி தாலுகா, திருப்பூர் பதிவு மாவட்டம், அவினாசி பதிவு மாவட்டம், அவினாசி சார் பதிவு மாவட்டம், "ராஜீவ் காந்தி நகரில்" இந்த சொத்து உள்ளது. 2004 3/4 சதுர அடி விஸ்தீரணம்கொண்ட நிலம் மற்றும் கட்டிடத்திற்கான எல்லைகள் • வடக்கு: 20 அடி அகலம் கிழக்கு மேற்காக லேஅவுட் சாலை; • தெற்கு: மனை எண். 28; • கிழக்கு: 25 அடி அகலம் தெற்கு வடக்காக லேஅவுட் சாலை; • மேற்கு: மனை எண். 52. > விஸ்தீரண விவரங்கள் • கிழக்கு மேற்காக வடக்குப் பக்கம் 50 அடி; • கிழக்கு மேற்காக தெற்குப் பக்கம் 49 அடி • தெற்கு வடக்காக கிழக்குப் பக்கம் 42 அடி; • தெற்கு வடக்காக மேற்குப் பக்கம் 39 அடி. மொத்தம்: 2004 3/4 சதுர அடி • அனைத்து வசதி உரிமைகள் மற்றும் பாதையுடன். மேலே உள்ள சொத்து இப்போது எஸ்.எப். எண்கள் 94/3A, 94/3B1, 97/2A, 97/2B1ல் உள்ளது. | 18.01.2025 09.01.2025 அன்று ரூ.30,99,538/- (ரூபாய் முப்பது லட்சத்து தொன்னூற்று ஒன்பதாயிரத்து ஐநூற்று முப்பத்தியெட்டு மட்டும்) மற்றும் வட்டி | 08.04.2025 |

இடம் : திருப்பூர், தமிழ்நாடு

தேதி : 08.04.2025

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

எஸ்எம்எப்ஜி இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டிற்காக

(முன்னர் புல்லர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கோ. லிமிடெட்)



**ADITYA BIRLA CAPITAL** PROTECTING INVESTING FINANCING ADVISING

**ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : இந்தியன் ரயான் காம்பவுண்ட், வேரவல், குஜராத் 362 266.

கார்ப்பரேட் அலுவலகம்: 12வது தளம், ஆர் டெக் பார்க், நிர்லான் காம்ப்ளக்ஸ், ஹப் மால் அருகில், கோரேகான் (கிழக்கு), மும்பை 400 063, மகாராஷ்டிரா.

**திருத்தம்/சேர்க்கை**

இந்த பத்திரிக்கையில் 03.04.2025 வியாழக்கிழமை மற்றும் 08.04.2025 செவ்வாய்க்கிழமை அன்று வெளியான **கடன்தாரர்** M/s. **சாய் கார்மென்ட்ஸ்,** கடன் கணக்கு எண்: **ABCOISTS000000676166**, தொடர்பான **மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு** சம்பந்தமாக இது வெளியிடப்படுகிறது. அகமதாபாத் என்.சி.எல்.டி., 24.03.2025 அன்று பிறப்பித்த உத்தரவின்படி, மாண்புமிகு என்.சி.எல்.டி., அகமதாபாத், **ஆதித்ய பிர்லா பைனான்ஸ் லிமிடெட்** நிறுவனத்தை **ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்** உடன் ஒருங்கிணைக்க அனுமதித்துள்ளது என்பதை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும். எனவே, உங்களுக்கு வழங்கப்பட்ட விற்பனை அறிவிப்பைப் பொறுத்தவரை **ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்** வழங்கியதாகக் கருதப்படுகிறது. பிற விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் எந்தவித மாற்றமும் இல்லை.

இடம் : திருப்பூர், தமிழ்நாடு

தேதி : 09.04.2025

ஒப்பம்/– அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,

**ஆதித்ய பிர்லா கேபிடல் லிமிடெட்**



YARA

**1985 ஆம் ஆண்டு உர (கட்டுப்பாட்டு) உத்தரவின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட விவரக்குறிப்புகளுடன் கூடிய தண்ணீரில் 100% கரையக்கூடிய உரம் விற்பனை**

யாரா பெர்டிலைசர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், பின்வரும் விவரக்குறிப்புகளுடன் தண்ணீரில் 100% கரையக்கூடிய உரத்தை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது என்று பொதுமக்களுக்கு இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | விவரம் | என்பிகேஎஸ் 17-00-17-17 | என்பிகேஎஸ் 12-00-23-25 | என்பிகே 00-09-46 |
|---|---|---|---|---|
| I | எடையின் அடிப்படையில் ஈரப்பதம் சதவீதம், அதிகபட்சம் | 0.5 | 0.5 | 0.5 |
| II | எடையின் அடிப்படையில் மொத்த நைட்ரஜன் சதவீதம், குறைந்தபட்சம் | 17 | 12 | 0 |
| III | தண்ணீரில் கரையக்கூடிய பாஸ்பேட்டுகள் (P205) எடையின் அடிப்படையில் சதவீதம், குறைந்தபட்சம் | 0 | 0 | 9 |
| IV | தண்ணீரில் கரையக்கூடிய பொட்டாஷ் (K20) எடையின் அடிப்படையில் சதவீதம், குறைந்தபட்சம் | 17 | 23 | 46 |
| V | சல்பர் (So3 ) எடையின் அடிப்படையில் சதவீதம், குறைந்தபட்சம் | 17 | 25 | 0 |
| VI | மொத்த குளோரைடு, எடையின் அடிப்படையில் சதவீதம், அதிகபட்சம் | 1.5 | 1.5 | 1.5 |
| VII | தண்ணீரில் கரையாத பொருள் எடையின் அடிப்படையில் சதவீதம், அதிகபட்சம் | 0.5 | 0.5 | 0.5 |
| VIII | சோடியம் (NaCl), எடையின் அடிப்படையில் சதவீதம், அதிகபட்சம் | 0.5 | 0.5 | 0.5 |
| IX | ஈயம் (Pb) எடையின் அடிப்படையில் சதவீதம், அதிகபட்சம் | 0.003 | 0.003 | 0.003 |
| X | காட்மியம் (Cd) எடையின் அடிப்படையில் சதவீதம், அதிகபட்சம் | 0.0025 | 0.0025 | 0.0025 |
| XI | ஆர்சனிக் (As) எடையின் அடிப்படையில் சதவீதம், அதிகபட்சம் | 0.01 | 0.01 | 0.01 |

வேளாண்மை மற்றும் விவசாயிகள் நல அமைச்சகத்தின் (வேளாண்மை, கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத்துறை) (கட்டுப்பாட்டு) உத்தரவு 1985–ன் கீழ் வெளியிடப்பட்ட 24.10.2015 தேதியிட்ட S.No. 2900 (E) உத்தரவின்படி இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

எந்தவொரு கேள்விகளுக்கும் அல்லது கூடுதல் விவரங்களுக்கும் விற்பனைக் குழுவைத் தொடர்பு கொள்ளவும்.

யாரா பெர்டிலைசர்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்

402, சுயோக் ஃப்யூஷன், தோலே பாட்டில் சாலை, புனே – 411001

தொலைபேசி: +020 41302585



RELIANCE Asset Reconstruction

**ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்**

ரிலையன்ஸ் சென்டர், 11வது மாடி, வடக்கு பக்கம், ஆர் டெக் பார்க், மேற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலை, கோரேகான் (கிழக்கு), மும்பை 400 063.

தொலைபேசி எண்.+91 22 4168 1200, பேக்ஸ் : +91 22 4168 1220

**சுவாதீனம் அறிவிப்பு (விதி 8(1)ன்படி) (அசையா சொத்து)**

அதேசமயம், ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட் [RARC 080 (RHDFC HL) TRUST], 29.03.2023 தேதியிட்ட ஒப்படைப்பு பத்திரத்தின் மூலம் ரெலிகேர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டிலிருந்து நிதிச் சொத்துக்களைப் பெற்றுள்ளது. கீரெலிகேர் ஹவுசிங் டெவலப்மெண்ட் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2)வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்பவும் 18.10.2021 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீசை வெளியிட்டது. அதன்படி **சிவக்குமார்** D, S/o. **தர்மராஜ், கதவு எண். 1/1025, அரசு காலனி, நீலாம்பூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு** 641062, **மொபைல் எண்: +91 9600778716/ மேலும் முகவரி: எஸ்.எப். எண். 207/2, நியூ காலனி, இருகூர் அஞ்சல், கோயம்புத்தூர், தமிழ்நாடு** 641103, **மேலும் : கதவு எண்.1/486எச், புதிய கதவு எண்.1/1025, புதிய எஸ்எப் எண் 799/32, ஹரிஜன நத்தம், நீலாம்பூர் கிராமம், சூலூர் கோயம்புத்தூர், சூலூர், தமிழ்நாடு** 641014 2. **தர்மராஜ் பழனிசாமி**, S/o. **பழனிசாமி, கதவு எண். 1/1025, அரசு காலனி, நீலாம்பூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு** 641062, **மொபைல் எண்: +91 9600778716/ மேலும்: கதவு எண்.1/486எச், புதிய கதவு எண்.1/1025, புதிய எஸ்எப் எண் 799/32, ஹரிஜன நத்தம், நீலாம்பூர் கிராமம், சூலூர், கோயம்புத்தூர், சூலூர், தமிழ்நாடு** 641014, 3. **பிரசாந்த்** D, S/o. **தர்மராஜ், கதவு எண். 1/1025, அரசு காலனி, நீலாம்பூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு** 641062, **மொபைல் எண்: +91 9600778716/ மேலும் முகவரி: எண். 1/167/7a, ரங்கா நகர், முதலிபாளையம், நீலாம்பூர் அஞ்சல், கோயம்புத்தூர், தமிழ்நாடு** 641062, **மேலும்: கதவு எண்.1/486எச், புதிய கதவு எண்.1/1025, புதிய எஸ்எப் எண் 799/32, ஹரிஜன நத்தம், நீலாம்பூர் கிராமம், சூலூர், கோயம்புத்தூர், சூலூர், தமிழ்நாடு** 641014, 4. **வசந்தாமணி** D, W/o. **தர்மராஜ், கதவு எண். 1/1025, அரசு காலனி, நீலாம்பூர், கோயம்புத்தூர், தமிழ்நாடு** 641062, **மொபைல் எண்: +91 9600778716/ மேலும்: கதவு எண்.1/486எச், புதிய கதவு எண்.1/1025, புதிய எஸ்எப் எண் 799/32, ஹரிஜன நத்தம், நீலாம்பூர் கிராமம், சூலூர் கோயம்புத்தூர், சூலூர், தமிழ்நாடு** 641014 (கடன்தாரர்) மற்றும் (உடன் கடன்தாரர்) ஆகியோரை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகை **ரூ.7,50,738/- (ரூபாய் ஏழு லட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று முப்பத்தியெட்டு மட்டும்)** மற்றும் மேலும் மேற்சொன்ன டிமாண்ட் நோட்டீஸ் தேதியிலிருந்து முழு தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த அறுபது (60) நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால், கடன்தாரர்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர், கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற் சொன்ன சட்டப்பிரிவு 13 (4) ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிகளின் 8வது விதிமுறைக்கு இணங்கவும், 03 **ஏப்ரல்** 2025 அன்று சுவாதீனம் எடுத்துக் கொண்டார்.

கடன்தாரர்/உத்தரவாததாரர்கள்/அடமானதாரர்களுக்கு குறிப்பாகவும் மற்றும் பொது மக்களுக்கு பொதுவாகவும் சொத்துக்களைக் கையாள வேண்டாம் என்று எச்சரிக்கப் படுகிறார்கள், மேலும் கூறப்பட்ட சொத்துக்கள் ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்டுக்கு 18.10.2021 அன்று வரை செலுத்த வேண்டிய தொகை **ரூ.7,50,738/- (ரூபாய் ஏழு லட்சத்து ஐம்பதாயிரத்து எழுநூற்று முப்பத்தியெட்டு மட்டும்)** மற்றும் மேலும் வட்டி மற்றும் செலவுகளுக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித கையாளுலும் மேற்கொள்ள வேண்டாம் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

விற்பனை அல்லது மாற்றத்திற்கு முன்பாக எந்த நேரத்திலும் "ஆர்ஏஆர்சி"க்கு செலுத்த வேண்டிய பாக்கித் தொகையை கடன்தாரர் செலுத்திவிட்டால், "ஆர்ஏஆர்சி" னால் ஈடு பெற்ற ஆஸ்திகள் விற்கப்படாது அல்லது மாற்றப்படாது என்றும் ஈடுபெற்ற ஆஸ்திகளை விற்றல் அல்லது மாற்றல் போன்ற எந்தவித நடவடிக்கையையும் "ஆர்ஏஆர்சி" எடுக்காது என்று சட்டப்பிரிவு 13 துணைப்பிரிவு (8)ன்படி கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

**அசையா சொத்துக்கள் விவரம்**

நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் அதன் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். கதவு எண்.1/486எச், புதிய கதவு எண்.1/1025, நீலாம்பூர் கிராமம், சூலூர் தாலுக்கா, கோயம்புத்தூர் மாவட்டம், எஸ்.எப்.எண்.799/7, புதிய துணைப் பிரிவு எஸ்.எப்.எண்.799/32ல் உள்ள 1515 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம் மற்றும் அதன் எல்லைகள்: கிழக்கு: கிருஷ்ணன் சொந்தமான வீடு, மேற்கு : சகுந்தலாவுக்கு சொந்தமான வீடு, வடக்கு : சாலை, தெற்கு: கிட்டன் வீடு, விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில் 37 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில் 36 அடி, தெற்கிலிருந்து வடக்காக கிழக்குப் பக்கத்தில் 41 அடி, தெற்கிலிருந்து வடக்காக மேற்குப் பக்கத்தில் 42 அடி. மேற்கண்ட சொத்து கோயம்புத்தூர் பதிவு மாவட்டம், சூலூர் சார் பதிவு மாவட்டம், தமிழ்நாடு 641014ல் அமைந்துள்ளது.

இடம்: கோயம்புத்தூர்

தேதி : 03.04.2025

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி

ரிலையன்ஸ் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனி லிமிடெட்



**HDFC BANK** We understand your world

பதிவு அலுவலகம்: ஹெச்டிஎப்சி பேங்க் ஹவுஸ், சேனாபதி பாபட் மார்க், லோயர் பாரேல் (மேற்கு), மும்பை 400 013 மற்றும் அதன் அலுவலகம் ஒன்று உள்ளது லியோ மானேஜ்மெண்ட், ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட், 1வது தளம், ஐ–திங்க் டெக்னோ வளாகம், கஞ்சூர்மார்க் (கிழக்கு), மும்பை 400042.

**ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்டில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்கள் விற்பனை அறிவிப்பு மற்றும் பொது அறிவிப்பு**

பத்திரங்களுக்கு எதிரான கடன்/ஓவர் டிராப்ட்டின் தன்மையில் கடன் வசதிகளைப் பெறுவதற்காக, வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்பனை செய்வது குறித்து ஹெச்டிஎப்சி வங்கி லிமிடெட்டின் ("வங்கி") கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

ஒப்புக் கொள்ளப்பட்ட கடன் விதிமுறைகளின்படி நிலுவைத் தொகைகளை திருப்பிச் செலுத்துவதில் கடன்தாரர்கள் தொடர்ந்து தவறியதன் காரணமாக, கீழேயுள்ள கடன் கணக்குகள் கடனற்ற நிலையில் உள்ளன. இந்த கடன் வாங்குபவர்களுக்கு வங்கி கீழே குறிப்பிடப்பட்ட தேதியில் இறுதி விற்பனை அறிவிப்பு உட்பட பல அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது, வங்கி உறுதிமொழியை செயல்படுத்தி, கடன்தாரருக்கு கீழே உள்ள கணக்குகளில் உள்ள நிலுவைத் தொகையை முழுவதுமாக திருப்பிச் செலுத்த 7 நாட்கள் அவகாசம் வழங்கியது, தவறினால், இது தொடர்பாக மேலும் அறிவிப்பை வெளியிடாமல், அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை விற்க வங்கிக்கு சுதந்திரம் உள்ளது.

கடன்தாரர்கள் செலுத்த வேண்டிய தொகையை புறக்கணித்தனர் மற்றும் செலுத்தத் தவறி விட்டனர், எனவே, கடன் ஒப்பந்தத்தின் கீழ் வங்கி அதன் உரிமைகளைப் பயன்படுத்துவதன் மூலம், 16 **ஏப்ரல்,** 2025 அன்று அல்லது அதற்குப் பிறகு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை மீட்டெடுப்பதற்காக பத்திரங்களை விற்க/ அப்புறப்படுத்த முடிவு செய்துள்ளது. எந்த நேரத்திலும், பங்குச் சந்தையில் ஏற்படும் ஏற்ற இறக்கம் காரணமாக, அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களின் மதிப்பு மேலும் வீழ்ச்சியடைந்தால், மார்ஜின் தேவையில் மேலும் குறைபாட்டை உருவாக்கினால் பின்னர் வங்கி அதன் விருப்பத்தின் பேரில் அடமானம் வைக்கப்பட்டுள்ள பத்திரங்களை ஒரு (1) காலண்டர் நாளுக்குள், இது தொடர்பாக எந்த அறிவிப்பும் இல்லாமல் விற்கும் என்று கடன்தாரர்களுக்கு மேலும் அறிவிக்கப்படுகிறது. அடமான பத்திரங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை சரிசெய்த பிறகும் மீதமுள்ள நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்த கடன்தாரர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

| வ. எண். | கடன் கணக்கு எண் | கடன்தாரர் பெயர் | 06 ஏப்ரல், 2025 அன்று செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை | விற்பனை அறிவிப்பு தேதி |
|---|---|---|---|---|
| 1 | XXXX3581 | என் நந்தகோபால் | 2,71,921.02 | 07-04-2025 |
| 2 | XXXX0063 | தத்தாத்ரேயன் கீதாஞ்சலி | 19,64,137.26 | 07-04-2025 |
| 3 | XXXX2026 | மானுவல் தாமஸ் | 52,217.23 | 07-04-2025 |
| 4 | XXXX0839 | எஸ் லதா | 29,497.38 | 07-04-2025 |
| 5 | XXXX0439 | வி ரங்கநாதன் | 135.93 | 07-04-2025 |
| 6 | XXXX7892 | ஜி சுதா சதாசிவம் | 9,28,598.55 | 07-04-2025 |
| 7 | XXXX6490 | என் சிவராஜ் வியாஸ் | 26,166.40 | 07-04-2025 |
| 8 | XXXX1902 | சி லலிதா | 4,47,219.00 | 07-04-2025 |
| 9 | XXXX3175 | காயத்ரி ஆர் | 2,66,852.66 | 07-04-2025 |
| 10 | XXXX7588 | மாணிக்கவேலுசாமி வி | 41,405.72 | 07-04-2025 |
| 11 | XXXX3556 | ஆனந்த கிருஷ்ணன் பி | 2,26,729.62 | 07-04-2025 |
| 12 | XXXX8260 | மணிமேகலை நாகேந்திரன் | 7,56,293.99 | 07-04-2025 |
| 13 | XXXX2100 | ஆர் புனிதா | 99,902.64 | 07-04-2025 |
| 14 | XXXX1874 | இஸ்ரேல் விவேக் பிரசாத் ஏ | 13,964.71 | 07-04-2025 |
| 15 | XXXX2702 | ஜெயந்தி சுவாமிநாதன் | 9,32,007.98 | 07-04-2025 |
| 16 | XXXX0510 | கே ராயப்பன் | 68,210.79 | 07-04-2025 |
| 17 | XXXX9621 | கே கீதா | 1,52,523.40 | 07-04-2025 |
| 18 | XXXX9760 | வாசுதேவன் ஏ | 7,58,243.68 | 07-04-2025 |
| 19 | XXXX4200 | கிருத்திகா ஜி | 2,24,050.00 | 07-04-2025 |
| 20 | XXXX7061 | பாண்டு ரங்கா ராவ் கோட்டா | 5,67,806.23 | 07-04-2025 |
| 21 | XXXX6147 | ராம ஜெகன்நாதன் | 19,537.60 | 07-04-2025 |
| 22 | XXXX7635 | ஹெலி ஜே ஷா | 20,18,590.64 | 07-04-2025 |
| 23 | XXXX9162 | பன்சிதர் சர்தா | 18,84,277.60 | 07-04-2025 |
| 24 | XXXX3174 | சேகர் டி | 2,59,538.99 | 07-04-2025 |
| 25 | XXXX6502 | கார்த்திகேயன் தங்கவேல் | 3,04,156.52 | 07-04-2025 |
| 26 | XXXX8400 | வினோத் கருணாகரன் | 13,940.12 | 07-04-2025 |
| 27 | XXXX4502 | மாளவிகா ஜெயராம் | 3,85,188.48 | 07-04-2025 |
| 28 | XXXX7084 | ஜெயந்தி சுவாமிநாதன் | 3,84,029.00 | 07-04-2025 |
| 29 | XXXX3301 | வி செந்தில்நாத் | 9,44,519.83 | 07-04-2025 |
| 30 | XXXX8772 | அரிஜீத் சௌத்ரி | 4,60,394.80 | 07-04-2025 |
| 31 | XXXX0078 | சுந்தரம்செட்டியார் ரங்கநாதம் கந்தசாமி | 20,468.50 | 07-04-2025 |
| 32 | XXXX6122 | சுந்தரம்செட்டியார் ரங்கநாதம் கந்தசாமி | 34,862.01 | 07-04-2025 |
| 33 | XXXX7415 | பூரணிதேவி சி | 1,88,701.90 | 07-04-2025 |
| 34 | XXXX4502 | சசிரேகா ஜெயபால் | 7,82,467.28 | 07-04-2025 |
| 35 | XXXX5995 | கிருஷ்ணபிரசாத் த/பெ. ராஜா சிதம்பரம் | 1,96,199.52 | 07-04-2025 |
| 36 | XXXX9712 | அறிவுச்சுடர், க/பெ. பாலகிருஷ்ணன் | 4,88,395.00 | 07-04-2025 |
| 37 | XXXX9764 | எல் நாச்சம்மை | 9,99,195.82 | 07-04-2025 |
| 38 | XXXX8618 | மாயி திவ்யா | 2,86,401.82 | 07-04-2025 |
| 39 | XXXX3870 | பிரதீப் வி | 3,62,201.82 | 07-04-2025 |
| 40 | XXXX8672 | கே ஆர் பாலசுப்ரமணியன் | 9,45,300.54 | 07-04-2025 |
| 41 | XXXX5531 | பாஸ்கரசாமி | 1,74,607.00 | 07-04-2025 |
| 42 | XXXX7396 | சரஸ்வதி என் | 10,08,851.20 | 07-04-2025 |
| 43 | XXXX4544 | எஸ் துர்காசங்கர் | 482.02 | 07-04-2025 |
| 44 | XXXX2700 | ஜே ராஜதுரை | 4,16,956.88 | 07-04-2025 |
| 45 | XXXX3952 | எஸ் அருண்மொழி | 4,31,124.82 | 07-04-2025 |
| 46 | XXXX8539 | ஜி எல் விஜயராகவன் | 6,65,372.00 | 07-04-2025 |
| 47 | XXXX9137 | ஸ்ரீனிவாசன் வெங்கடாச்சலம் | 9,37,519.70 | 07-04-2025 |

நாள் : 09.04.2025

இடம் : தமிழ்நாடு

ஒப்பம்/–

ஹெச்டிஎப்சி பேங்க் லிமிடெட்